செ.வெ.எண்: 919/2016 நாள்: 30.12.2016

# செய்தி

## நலிந்த நிலையிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் வழங்குதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2016-ம் ஆண்டிற்கான நலிந்த நிலையிலுள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதிய உதவித்தொகை பெறுவதற்கு விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்று, தற்போது நலிவடைந்த நிலையிலுள்ள தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதிய உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**தகுதிகள்**

1. **குறைந்தபட்ச தகுதி**
   - சர்வ தேச / தேசிய அளவு விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்பு.
   - இப்போட்டிகளில் முதலிடம் / இரண்டாமிடம் / மூன்றாமிடம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   - பள்ளி / கல்லூரி காலங்களில் சாதனை படைத்தவர்கள் மட்டுமே தகுதி பெறுவர். அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கங்களினால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் கலந்துக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - முதியோருக்கான போட்டிகள் மற்றும் அழைப்புப் ரோபட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதியில்லை.
2. 2016 ஏப்ரல் முதல் தேதியன்று 58 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரரின் மாத வருமானம் ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட, விளையாட்டுச் சான்றிதழ் நகல்கள், வருமானச் சான்று நகல், வயது குறித்த சான்று நகல் ஆகியவை கண்டிப்பாக இணைக்கப்படல் வேண்டும்.
5. மத்திய அரசின் விளையாட்டு வீரருக்கான ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் மத்திய / மாநில அரசின் கீழ் ஓய்வூதியம் பெறுவோர் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதி இல்லை.
6. ஓய்வூதியப் படிவத்தை எச்சூழ்நிலையிலோ, அடிப்படையிலோ, நிராகரிக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு உரிமை உண்டு.

ஓய்வூதிய உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் ரூ.10/- கொடுத்து, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் 31.01.2017 -க்குள் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற செய்தியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமது செய்திக்குறிப்பில் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.